உ

வைத்தியகலாநிதி

# வை. த. பசுபதி அவர்கள்

# நினைவு மலர்

NP

# SOUVENIR

IN MEMORY OF THE LATE

**DR. V. T. PASUPATI**

22–02–1981

உ

வைத்தியகலாநிதி

# வை. த. பசுபதி அவர்கள்

# நினைவு மலர்

# SOUVENIR

## IN MEMORY OF THE LATE

## DR. V. T. PASUPATI

22-02-1981

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

உ

அமரர், வைத்தியகலாநிதி

# வை. த. பசுபதி அவர்கள்

# Late DR. V. T. PASUPATI



தோற்றம்: 09–05–1894 மறைவு: 23–01–1981

# எனது நண்பன் Dr. V. T. பசுபதி

## — வாழ்க்கை வரலாறு —

டக்டர் பசுபதி அவர்கள் திருநெல்வேலியில் திரு. வைத்தியநாதன் தம்பு அவர்களுக்கும் திருமதி இராமாசிப்பிள்ளை அம்மையாருக்கும் கனிட்ட புத்திரனாய் 1894ஆம் ஆண்டு மே மாதம் 9ஆந் திகதி பிறந்தார். பெற்ருேர் இவரைச் சைவ ஆசாரப்படி வளர்த்தார்கள். டக்டர் பசுபதி அவர்களை நான் 1906ஆம் ஆண்டு தொடக்கம் அறிவேன். வண்ணுர் பண்ணை இந்துக் கல்லூரியில் சகமாணவர்களாக விருந்தோம். இருவரும் திருநெல்வேலியிலிருந்து பாடசாலைக்குப் போய்வந்தோம். அவர் எப்போதும் சந்தனப் பொட்டுப் போட்டிருப்பார். சிரித்த முகம்: இன்சொல்; அடக்கமான பேச்சு.

பாடசாலையில் மாணவர் பங்குபற்றும் விஷயங்களிலெல்லாம் தானும் ஊக்கமாகப் பங்குபற்றுவார். கல்லூரியில் சிறந்த மாணுக்கன் என்பதற்கும். ஒழுக்கத்திற்கும் (The Best All-round Boy) பரிசு பெற்ருர். இவரின் கல்வித் திறமையை அறிந்த தமையனுர் டக்டர் கணபதிப்பிள்ளை அவர்கள். இவரை டக்டராகப் படிப்பிக்க விரும்பி கண்டி 'டிறினிற்றிக் கல்லூரியில் (Trinity College) சில காலம் படிப்பித்து, பின் சென்னபட்டினம் வைத்திய கல்லூரி (Medical College)யில் சேர்த்தார்கள். அங்கு டக்டர் பரீட்சையில் சிறந்த சித்தி பெற்றபின் இலங்கையில் அரசாங்க வைத்தியசாலையில் உத்தியோகம் ஏற்ருர். இக்காலத்தில் இவரின் விவாகம் வெகு விமரிசையாய் நடந்தது. இவரின் மனைவியாய் வாய்த்த கமலாம்பிகை என்பவர் பிரபல வைத்தியர் கஸ்தூரி

முத்துக்குமாருவின் சிரேட்ட மகளாவர். கமலாம்பிகை பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை என்றுல் மிகையாகாது. வள்ளுவர் வாசுகி போலும் இல்வாழ்க்கையை அன்பாயும், பண்பாயும் நடத்தி வந்தார்கள். கமலாம்பிகை ஆரம்பத்தில் ஆறுமுக நாவலர் பாடசாலையில் கல்விகற்று, பின்னர் இராமநாதன் கல்லூரியில் எனது மாணவியாகப் படித்துவந்தார். அந்தக் காலத்திலேயே கமலாம்பிகை தெய்வ பக்தியிலும், படிப்பிலும் சிறந்து விளங்கினுர். படிப்பில் 'சீனியர் லோக்கல்' (Senior Local) பரீட்சையிற் சித்தி எய்தினுர். டக்டர் பசுபதி-கமலாம்பிகையின் இல்வாழ்க்கை எல்லோராலும் பாராட்டத்தக்க தொன்றுகும். குடும்பத்தில் உற்ருர் உறவினர் நண்பர் எல்லாரோடும் அன்பாயும் ஆதரவாயும் நடப்பார்கள். இவர்களுக்கு முதற் பிள்ளையாக ஒரு பெண்பிள்ளையும், பின் ஒருவர்பின் ஒருவராக ஐந்து ஆண் பிள்ளைகளும் பிறந்தனர். ஒருவர் பெறக்கூடிய பாக்கியங்களுக்குள் மிகப் பெரும் பாக்கியம்: தான் பெற்ற மக்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வாழ்வதைப் பார்க்கும் மகிழ்ச்சி. இந்த வகையில் டக்டர் பசுபதி அவர்கள் தன் மக்களால் மகிழ்ச்சியே யடைந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

டக்டர் பசுபதி அவர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் ஊர் மக்களின் நன்மதிப்பை என்றுமே பெற்றிருந்தார். அவர் எந்தெந்த ஊரில் சேவையாற்றினுரோ அந்த ஊர் மக்கள் எல்லாரும், வறியவர்களாயினும்சரி தனவந்தராயினும்சரி, அவரைப் போற்ருதவர்கள் இல்லை. அவர் ஒரு ஊரை விட்டு வேறு ஊருக்கு மாற்றலாகிப் போகும் பொழுது மக்கள் எல்லோரும் கவலையோடுதான் வழி அனுப்புவார்கள். அவர் சாவகச்சேரியில்

ஐந்து வருடம் கடமை ஆற்றிவிட்டு இங்கிலாந்து செல்வதற்கு மாற்றம் எடுத்தார். அப்பொழுது அவ ருக்குச் சாவகச்சேரி மக்கள் ஒரு பிரியாவிடைக் கூட்டம் வைத்தார்கள். தென்மராட்சி மக்களே திரண்டு ஒரு இடத்தில் கூடிவிட்டார்கள். அந்த இடம்தான் 'டிறிபேக்' கல்லூரி மைதானம். அந்தக் கூட்டத்திற்குக் கொழும்பிலிருந்தும் பல பிர முகர்கள் வந்திருந்தார்கள். அன்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தன் பேச்சில் சொன்ன தாவது: "இராகு கேதுக்களை ஒரு வீட்டிற் புகுத்த லாம். ஆனால் தென்மராட்சி மக்களை ஒரு இடத்தில் சந்திக்கவைக்க முடியாது. ஆனால் இன்று டக்டர் பசுபதியைப் பார்க்க தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு எல்லோருமே கூடிவிட்டார்கள். டக்டரின் அன்பே கூட்டிவிட்டது".

டக்டர் பசுபதி அவர்கள் பல உத்தியோக உயர் வைப் பெற்று இறுதியில் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அத்தியக்ஷகர் (M. S.) ஆகக் கடமையாற்றி பின் வடபெரும்பாகத்திற்கு சுகாதார சேவை அத்தியக்ஷகராகப் (S. H. S.) பணியாற்றி ஓய்வுபெற்ருர். யாழ்ப்பாண வைத்திய சங்கத்தின் தலைவராகவும் இருந்து வைத் திய கல்வியிலும் அதிக ஊக்கமெடுத்தார். ஓய்வு பெற்ற பின்பும் அவர் சமூகசேவையில் ஈடுபட்டார். பல சபைகளின் தலைவராகவும் அங்கத்தவராகவும் பணியாற்றினர். குறிப்பாக உற்றவிடத்துதவும் மித்திரர் சங்கம், பண்ணை ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் ஸ்தாபன சங்கம், வடபிராந்திய நிரந்தர சகாய நிதிச் சங்கம், யாழ்ப்பாண கயரோக சங்கம், கைதடி அரசாங்க அநாதைகள் இல்லக் குழு விலும் யாழ் புற்றுநோய் தடுப்புச் சங்கத்திலும்,

அங்கத்தவராக இருந்தபோதும் யாழ் சமூகசேவை சங்கத்தின் உப தலைவராகவும் இருந்து யாழ் புற்று நோய் சிகிச்சை நிலையத்தை உருவாக்குவதற்கு அயராது நடவடிக்கை எடுத்தவர் என்பதையும் அறிவோம்.

சமயத்துறையிலும் இவர் தமது இளம் வயதிலேயே தன் பிறந்த ஊராகிய திருநெல்வேலியில் இளைஞர் இந்து வாலிபர் சங்கத்தின் ஸ்தாபகராகத் திகழ்ந்தார். இச்சங்கம் தற்போதும் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையில் நிருவாக அங்கத்தவராகவும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபை அங்கத்தவராகவும் கடமையாற்றினர். இவர்களின் குலகுருவாகிய யோகர்சுவாமிகளின் விருப்பத்திற்கிணங்க ஸ்தாபித்த சிவதொண்டன் நிலையத்தின் நிர்வாக அங்கத்தவராகவும் தங்கள் குலதெய்வமாகிய சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தாவாகவும் சிறந்த சேவையாற்றினர்.

எந்த வைபவம் என்றாலும் அழைப்பு வந்தால் தவருது சமுகமளிப்பர்.

டக்டரும் மனைவியாரும் ஒரு விசேஷமான வாழ்க்கை நடத்தி வந்தார்கள். யோகர் சுவாமிகளின் அருள் நோக்கையும், பூரண ஆசியையும் இவரும் இவரின் குடும்பத்தினரும் பெற்ற பாக்கியமுடையவர். அவர்களுடைய பிள்ளைகள் மேலும் சிறப்புற்று வாழப் பார்வதி பரமேஸ்வரன் மேலும் மேலும் நிறைந்த திருவருளைப் பாலிப்பார்களாக.

சிவ சிவ

**செ. மயில்வாகனம்,** J. P.
அளவெட்டி

## திருநெல்வேலி தந்த
## 'சால்பு'ச் செல்வம்

# டக்டர் திரு. வி. ரி. பசுபதி அவர்கள்

### 'சால்பு'

சான்றோரின் குணம்

'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்'.

என்பது வள்ளுவர் வாக்கு.

'சால்பு' என்ற மாளிகையைத் தாங்கும் தூண்கள் ஐந்து. அவை:

அன்பு—நாண் (பழிக்கஞ்சுதல்)—ஒப்புரவு (உலகநடையறிந்தொழுகல்)—கண்ணோட்டம் (தாக்ஷண்யம்)—வாய்மை (சத்தியம்) என்பனவாம். இந்த ஐந்தும் நிறைவு பெற்றிருக்குமிடத்தில் இருப்பது 'சால்பு'.

இந்தச் 'சால்பு' என்ற குணம் பிறப்பில் அமைந்தவர்கள்தாம் கனம் பசுபதி அவர்கள். அவர்களுக்கு அமைந்த பெயரும் அவர்களுக்கே பொருத்தமானது.

அவர்கள் இளம் வயசிலேயே திருநெல்வேலி வாலிபர்களுக்கு நல்ல வழிகாட்டியாய் வாழ்ந்தவர்கள்.

அவர்களின் புக்ககமான கஸ்தூரியார் வீடு, தவச் செல்வர்களான யோகர் சுவாமிகளின் முழுமையான ஆசிக்குப் பாத்திரமானது.

டக்டர் அவர்களின் மாமனர் கனம்பொருந்திய வைத்தியர் முத்துக்குமாரு அவர்களும், அவர்களின் அருமைப் புதல்வரான திரு. கதிரைவேற்பிள்ளை அவர்களும், ஏழைகளுக்கு மருந்தும் உதவி, அநுபானத்துக்குப் பணமும் உதவுபவர்கள். அவர்கள் பெருந்தகைமை இருந்தவாறு!

பிறந்தகம், புக்ககம் இரண்டனையும் விளக்கஞ்செய்து வாழ்ந்தவர்களான டக்டர் கனம் பசுபதி அவர்களின் பெருந்தகைமையை அவர்கள் புதல்வர்கள்பால் உலகங் கண்டு மகிழ்கின்றது.

'தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்'.

என்பது தேவர் குறள். எச்சம் - சந்ததி; பிள்ளைகள்; விட்டுச் சென்றவைகள்.

அமரத்துவம் எய்திய சாந்த சொரூபியான டக்டர் அவர்களின் ஆத்ம சாந்தியை முன்னிட்டுத் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி! சாந்தி!.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
15-2-81

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த

# பசுபதீஸ்வர பதிகம்

திருச்சிற்றம்பலம்

பண் : திருவிருத்தம்

சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டுநின் தாள்பரவி
ஏம்பலிப் பார்கட் கிரங்குகண் டாயிருங் கங்கையென்னும்
காம்பலைக் கும்பணைத் தோளி கதிர்ப்பூண் வனமுலைமேல்
பாம்பலைக் குஞ்சடை யாய்எம்மை ஆளும் பசுபதியே. 1

உடம்பைத் தொலைவித்துன் பாதந் தலைவைத்த உத்தமர்கள்
இடும்பைப் படாமல் இரங்குகண் டாயிருள் ஓடச்செந்தீ
அடும்பொத் தனைய அழல்மழு வாஅழ லேயுமிழும்
படம்பொத் தரவரை யாய்எம்மை ஆளும் பசுபதியே. 2

தாரித் திரந்தவி ராவடி யார்தடு மாற்றமென்னும்
மூரித் திரைப்பெளவ நீக்குகண் டாய்முன்னை நாளொருகால்
வேரித்தண் பூஞ்சுடர் ஐங்கணை வேள்வெந்து வீழச்செந்தீப்
பாரித்த கண்ணுடை யாய்எம்மை ஆளும் பசுபதியே. 3

ஒருவரைத் தஞ்சமென் றெண்ணாதுன் பாதம் இறைஞ்சுகின்றார்
அருவினைச் சுற்றம் அகல்விகண் டாய்அண்ட மேயணவும்
பெருவரைக் குன்றம் பிளிறப் பிளந்துவேய்த் தோளியஞ்சப்
பருவரைத் தோலுரித் தாய்எம்மை ஆளும் பசுபதியே. 4

இடுக்கொன்று மின்றியெஞ் சாமையுன் பாதம் இறைஞ்சுகின்றார்க்
கடர்க்கின்ற நோயை விலக்குகண் டாய்அண்டம் எண்திசையும்
சுடர்த்திங்கள் சூடிச் சுழல்கங்கை யோடுஞ் சுரும்புதுன்றிப்
படர்க்கொண்ட செஞ்சடை யாய்எம்மை ஆளும் பசுபதியே. 5

அடலைக் கடல்கழி வான்நின் அடியிணை யேஅடைந்தார்
நடலைப் படாமை விலக்குகண் டாய்நறுங் கொன்றைநின்கள்
சுடலைப் பொடிச்சுண்ண மாசுணஞ் சூளா மணிகிடந்து
படரச் சுடர்மகு டாளம்மை ஆளும் பசுபதியே. 6

துறவித் தொழிலே புரிந்துன் சுரும்படி யேதொழுவார்
மறவித் தொழிலது மாற்றுகண் டாய்மதில் மூன்றுடைய
அறவைத் தொழில்புரிந் தந்தரத் தேசெல்லும் மந்திரத்தேர்ப்
பறவைப் புரமெரித் தாய்எம்மை ஆளும் பசுபதியே 7–9

சித்தத் துருகிச் சிவனெம்பி ரானென்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின் றூர்பிணி தீர்த்தருளாய்
மத்தத் தரக்கன் இருபது தோளும் முடியுமெல்லாம்
பத்துற் றுறநெரித் தாய்எம்மை ஆளும் பசுபதியே. 10

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

திருமறைக்காடு — பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

கதமலி களிறது பிளிறிட வுரிசெய்த அதிகுண னுயர்பசு
பதியதன் மிசைவரு பசுபதி பலகலை யவைமுறை முறையுணர்
விதியறி தருநெறி யமர்முனி கணனொடு மிகுதவ முயல்தரு
மதிநிபு ணர்கள்வழி படவளர் மறைவன மமர்தரு பரமனே.

திரு இலம்பையங்கோட்டூர் — பண்: குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பாலனும் விருத்தனும் பசுபதி தானும்
பண்டுவெங் கூற்றுதைத் தடியவர்க் கருளும்
காலனு மெனதுரை தனதுரை யாகக்
கனலெரி யங்கையி லேந்திய கடவுள்
நீலமா மலர்ச்சுனை வண்டுபண் செய்ய
நீர்மலர்க் குவளைகள் தாதுவிட் டோங்கும்
ஏலநா றும்பொழி லிலம்பையங் கோட்டு
ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ தியல்பே.

திருக்கச்சியேகம்பம் பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

ஆகம்பத் தரவணையான் அயனறிதற் கரியானைப்
பாகம்பெண் ணுண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை என்மனத்தே வைத்தேனே.

திருக்கோடிகா பண் : திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

பழகநான் அடிமை செய்வேன் பசுபதி பாவ நாசா
மழகளி யானை யின்தோல் மலைமகள் வெருவப் போர்த்த
அழகனே அரக்கர் திண்டோள் அருவரை நெரிய வூன்றுங்
குழகனே கோல மார்பா கோடிகா வுடைய கோவே.

## திருநாவுக்கரசு சுவாமிகள்

திருவெறும்பியூர் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பளிங்கின்நிழ லுட்பதித்த சோதி யானைப்
பசுபதியைப் பாசுபத வேடத் தானை
விளிந்தெழுந்த சலந்தரனை வீட்டி னானை
வேதியனை விண்ணவனை மேவி வையம்
அளந்தவனை நான்முகனை அல்லல் தீர்க்கும்
அருமருந்தை ஆமா றறிந்தென் உள்ளந்
தெளிந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

### திருமுறை 1

திருவலிவலம் பண் — வியாழக்குறிஞ்சி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

### திருமுறை 2

திருக்கேதீச்சரம் பண்: நட்டராகம்

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறுந் துதிசெய அருள்செய்கே
தீச்சர மதுதானே.

### திருமுறை 3

திருக்கோணமலை பண்: புறநீர்மை

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

### திருமுறை 4

திருவதிகைவீரட்டானம் பண் — கொல்லி

சலம்பூ வொடுதூ பம்மறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
உன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்.
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

### திருமுறை 5

பொது பண் —.தனித்திருக்குறுந்தொகை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

### திருமுறை 6

தனித்திருத்தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
யிறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

திருச்சிற்றம்பலம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

### திருமுறை 7

திருக்கேதீச்சரம் — பண் — நட்டபாடை

நத்தார்புடை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமணை வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதிச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

### திருமுறை 8

பிடித்த பத்து — எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அச்சோப்பதிகம் — கலிவிருத்தம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்

## திருவிசைப்பா

திருமுறை 9

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளா ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருவீழிமிழலை பண் —பஞ்சமம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

திருச்சிற்றம்பலம்

## திருப்பல்லாண்டு

கோயில் பண் — பஞ்சமம்

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

மீண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்
காட்செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்று மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

## திருமந்திரம்

### திருமுறை 10

சிவசிவ வென்கிலார் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

திருச்சிற்றம்பலம்

## பட்டணத்தார் பாடல்

### திருமுறை 11

மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ்செந்தீ
ஐயா நின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன வாய்மெல்லப் போனதுவே.

திருச்சிற்றம்பலம்

## திருமுருகாற்றுப்படை

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சி
லொருகா லினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

திருச்சிற்றம்பலம்

## திருப்புராணம்

திருமுறை 12

சிவபெருமான்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

உமாதேவியார்

பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியார்கோன்
அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம
சுந்தரிபூங் கழல்போற்றி.

விநாயகர்

உச்சியின் மகுட மின்ன
வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை
மணிகொள்கிம் புரிவ யங்க
மெச்செவிக் கவரி தூங்க
வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ர
கணபதிக் கன்பு செய்வாம்.

வைரவக் கடவுள்

பருமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வீரபத்திரக் கடவுள்

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

சுப்பிரமணியக் கடவுள்

புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய னாக்கி
யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாதபங் கயங்கள் போற்றி,

திருச்சிற்றம்பலம்

**கந்தரலங்காரம்**

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

திருச்சிற்றம்பலம்

## கந்தரநுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

திருச்சிற்றம்பலம்

## திருநந்திதேவர்

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூழ்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்

## அறுபத்துமூவர்

தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ
முத்து மூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் றாளிணை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்

## சண்டேசுரர்

மனுதிகளுக் கெட்டாத பரமா னந்த
வாழ்வினையங் கோரிலிங்க மணலாற் கூப்பித்
தனுதிதயந் தனினின்றுந் தாபித் தான்பால்
தனைத்தவன்பா லாட்டவந்து தடுக்கத் தாதை
எனுதவன்ற னிருபதமு மழுவாற் றுண்டித்
திகழ்ந்தவனைப் பரபதத்து ளிருத்தித் தானும்
பினுகியரு ளடைந்தவிறற் சண்டே சன்றுள்
பிரசமல ரிறைத்திறைஞ்சிப் பரசு வாமே.

திருச்சிற்றம்பலம்

## திருப்புகழ்

கதிர்காமம்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

---

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங்
கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின்
னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந்
தொழாப்பிழையு
மெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி
யேகம்பனே.

திருச்சிற்றம்பலம்

---

## திருநந்திதேவர் சிவபெருமானிடத்திற் கேட்டுக்கொண்ட சில வரங்கள்

ஆமளவும் சிவமறவா திருத்தல் வேண்டும்
அடியேன்தன் விண்ணப்பம் ஆக்கம் முத்தி
சாமளவுஞ் சஞ்சலமற் றிருத்தல் வேண்டும்
சாம்பொழுது நோயின்றிச் சாதல் வேண்டும்
போமளவில் நாயடியேற் கெதிரே வந்து
புகுந்தாயோ வெனவெண்ணிப் புகுந்த போது
கோமளவல் லியுநீயும் இருக்குங் கோலம்
கும்பிடநான் வரவேண்டுங் கூத்த னரே.

திருச்சிற்றம்பலம்

உ

குருபரன்

சிவயோக சுவாமிகள் அருளிய

# நற்சிந்தனை

என்னும் ஞானக் களஞ்சியத்திலிருந்து

## ஆறு பாடல்கள்

### நானுமவனே நீயுமவனே

ஊனு மவனே உயிரு மவனே
நானு மவனே நீயு மவனே
கோனு மவனே குருவு மவனே
மானும் வார்த்தை பிறிதறி யேனே.

அறியும் பொருளும் அறிபடு பொருளும்
செறியும் பொருளும் செறியாப் பொருளும்
குறியுங் குணமு மற்ற கோவென
அறிவா ரீண்டு பிறவா ராமே.

### திருவருள் கைகூடுது

இராகம் — சாவேரி    தாளம் — ஆதி

பல்லவி

திருவருள் கைகூடுது சிந்தை களிகூருது.

அநுபல்லவி

ஒருவரும் எதிரில்லாத உண்மை முதிருது. (திருவருள்)

சரணங்கள்

ஒன்றோ விரண்டோ வென்னுஞ் சந்தேகம் தெளியுது
ஓம்சிவாய நமவென்ன உள்ளங் குளிருது. (திருவருள்)

அதிர வரும் நமனும் அஞ்சியே பணிசெய்யும்
அஞ்சுவ தொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை. (திருவருள்)

# ஆண்டவன் திருவடி

இராகம்—தன்னியாசி தாளம் — ஆதி

## பல்லவி

ஆண்டவன் திருவடி வேண்டிக்கொண் டாலென்றும்
ஆறுதல் உண்டாகும்.

## அநுபல்லவி

கர்ண்பதெல் லாம்நீலை யன்றெனக் காட்டும்
காயத்தை வெல்லுமு பாயத்தை யூட்டும். (ஆண்டவன்)

## சரணங்கள்

பஞ்சப் புலன்வழி போம்மனத் தினைவெல்லும்
பஞ்சாட் சரத்தை யனுதினஞ் சொல்லுங்
கொஞ்சங்கொஞ் சமாகச் சினத்தினைக் கொல்லுங்
குற்றம் யாவையுங் குணமாகக் கொள்ளும். (ஆண்டவன்)

பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை போக்கும்
போக்கு வரவற்ற பொன்னடி நோக்கும்
எந்நாளும் சும்மா விருப்பதைக் காக்கும்
ஏழைகள் பேரில் இரக்கத்தை யாக்கும். (ஆண்டவன்)

வெட்ட வெளியிலே நின்றிடர் தீர்க்கும்
வேதாந்த சித்தாந்தம் ஒன்றென்று நோக்கும்
கட்டுப் படாத மனத்தினைக் கட்டும்
கங்குல் பகலற்ற காட்சியுண் டாக்கும். (ஆண்டவன்)

சுவாமி யோகநாதன் சொல்லிய பாட்டு
சுந்தர மான வழிதனைக் காட்டும்
ஆவி யுள்ளளவும் அமுதத்தை யூட்டும்
அரும்பிர மாஸ்மி யெனமுடி சூட்டும். (ஆண்டவன்)

## ஏற்குமோ

பல்லவி

ஏற்குமோ திருவருளுக் கேற்குமோ.

அநுபல்லவி

என்னையும் உன்னையும் வேருய்
எண்ணிப் பணிவதற்கு. (ஏற்குமோ)

சரணங்கள்

கண்ணே கண்ணின் மணியே கனியே கனிரசமே
எண்ணேன்பிறதெய்வம்எல்லாம்உனதுசெயல். (ஏற்குமோ

விண்ணுதி பூதமே வேதவே தாந்தமே
பெண்ணே ஆணே அலியே பேதமில்லாப் பெம்மானே.
(ஏற்குமோ)

## முத்திக்கு வழி

ஆசிரியப்பா

முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலேந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிறல் தன்போற் பிறரையும்
பார்த்தல்; பணப்பற் றெழித்தல்; பண்புடன்
வார்த்தை யாடல்; வாதனை தீர்த்தல் ;
கோத்திரங் குலமெனும் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே.

## பெருமானைப் பார்த்துநின் றடுமயிலே

இராகம்: ஆனந்தபைரவி

ஆடுமயிலே பணிந் தாடுமயிலே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே.

வீடுநமக் கெப்போதும் சொந்த மென்றே
வீணைசைப் படுவதெல்லாம் பந்த மென்றே
கூடுவிட் டுயிர்போமுன் கும்பிட்டுக் கொண்டே
குழைந்து குழைந்துநின் றடுமயிலே. (ஆடுமயிலே)1

பொறிவழி போம்மனத்தை அடக்கிக் கொண்டே
பூரண நிட்டையிலே மடக்கிக் கொண்டே
அறிவறி யாமையிரண்டும் நாமல்ல வென்றே
ஆனந்தமாய்ப் பணிந்தெழுந் தாடுமயிலே. (ஆடுமயிலே)2

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணிக் கொண்டே
இரந்திரந் தைந்தெழுத்தைப் பன்னிக் கொண்டே
ஔவியம்பொ றமைகோபம் அகற்றிக் கொண்டே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே. (ஆடுமயிலே)3

ஒருபொல்லாப்பு மில்லையென்ற புத்தியைக் கேட்டே
ஓம்சிவாயி நமவெனச் செபித்துக் கொண்டே
குருநாதன் திருவடியைக் கும்பிட்டுக் கொண்டே
கூடிக்க ளித்துநின் றடுமயிலே. (ஆடுமயிலே)4

தேசகாலம் யாவையும் மறந்து நின்றே
சிறுபிள்ளையைப் போலமனம் சிறந்து கொண்டே
பேசவுமறி யாமற்பேய்க் கோலங் கொண்டே
பெருமானைப் பார்த்துநின் றடுமயிலே. (ஆடுமயிலே)5

உ

# நன்றியுரை

சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அவர்களின்

இறுதிச்சடங்குகளில் நேரிற் கலந்துகொண்டும்,

மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியும்,

இரங்கற் செய்திகள் அனுப்பிவைத்து அநுதாபம் தெரிவித்தும்,

பல்வேறுவகைகளில் உதவி, ஒத்துழைப்பு நல்கியும்,

அந்தியேட்டிக் கிரியைகளின்போது சமுகமளித்தும்

பங்குகொண்ட உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'குருத்துவாரம்',
கஸ்தூரியார் வளவு,
யாழ்ப்பாணம்.

கமலாம்பிகை — பசுபதியும்
குடும்பத்தவர்களும்

உ

# ACKNOWLEDGEMENT

The Members of the family of the late Dr. V. T. Pasupati express their deep gratitude to their many relations and friends who consoled them by their gracious presence and messages of sympathy and sent floral tributes and for their spontaneous assistance in numerous ways. They also thank them for their kind presence at the Anthietty ceremony.

'Gurudhuwaram',
Kasturiar Valavu,
JAFFNA.

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் — 3732/2- 8: